# DEPOSITION OF WITNESS

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

## Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| **CC** | 106 | 2018 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**1 | சௌமியா | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| **Religion / Caste** : | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 11/01/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அழகாபுரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பதினோராம் வகுப்பு படித்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்த மாரிமுத்து, தங்கபொன்னு ஆகியோர் என்னுடைய அப்பா, அம்மா ஆவார்கள். சிந்தலவாடம்பட்டி அருகே 29.05.2018 ம் தேதி 12.15 மணியளவில் ஸ்பிளண்டர் இருசக்கரவாகனத்தில் நான், எனது அம்மா,அப்பா,எனது தங்கை சுகபிரியா ஆகியோர் இடதுபுறமாக வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த அரசு பஸ் எங்களது வாகனத்தின் மீது மோதியது. அதில் எனது அப்பாவிற்கு தலைபகுதியில் காயம்பட்டது. எனது அம்மாவிற்கு தலையின் நெஞ்சுபகுதியில் காயம்பட்டது. எனக்கு கை,கால்களில் காயம்பட்டது. எனது தங்கைக்கு காலில் காயம்பட்டது. எனது அப்பா பழனி ஜி.கெச்சில் இறந்துவிட்டார்.எனது அம்மா மதுரை ஜி.கெச்சுக்கு கொண்டு செல்லும்போது இறந்துவிட்டார். எனக்கு பழனி வேல் மருத்துவமனையிலும் எனது தங்கை சுகபிரியாவிற்கு மதுரை வேலம்மாள் மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மருத்துவமனையில் நான் இருந்த போது வாங்கினார்கள்.அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் பேருந்தை

விபத்து சமயத்தில் யார் ஓட்டிவந்தது என்று எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

எனக்கு காயம் ஏற்பட்டவுடன் வேல் மருத்துவமனைக்கு தான் கொண்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனைக்கு முதலில் அழைத்துச்சென்றார்கள் அங்கு என்னிடம் புகார்வாக்குமூலம் வாங்கப்பட்ட பிறகு நான் வேல் மருத்துவமனைக்கு சென்றேன். பழனி மருத்துவமனைக்கு சென்ற என்னை மருத்துவர் பார்த்து சிகிச்சை அளித்தாரா? என்றால் மருத்துவர் பார்த்துவிட்டு சிகிச்சை அளித்துவிட்டு வேல்மருத்துவமனைக்கு தாட்டி விட்டார்கள். அரசு மருத்துவமனையில் டாக்டர்கள் என்னை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தில் நான்கு நபர்கள் வருவது சட்டப்படி தவறு என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார்வாக்குமூலத்தில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேனா? என்றால் நான் மட்டும்தான் செய்தேன். எனது அப்பா இருசக்கரவாகனத்தில் எங்களோடு சேர்த்து நான்குநபர்களாக வந்து நிலைதடுமாறி பேருந்தின் வலதுபக்கத்தில் விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவின் கவனக்குறைவினாலும் அஜாக்கிரதையாலும் தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **Sowmya**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

(**sd**) **R**.**Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 11/01/2021

## DEPOSITION OF WITNESS

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

## Judicial Magistrate Court At Oddanchatram

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 106 | 2018 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**2 | சுகபிரியா | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| **Religion** / **Caste** : | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 11/01/2021

நீதிமன்ற வினா

கேள்வி .. நான் எந்த ஊரில் இருந்து வருகிறேன் என்றால் ?

பதில் .. நிலக்கோட்டை கொக்குப்பட்டியிலிருந்து வருகிறேன்.

கேள்வி .. என்ன படிக்கிறேன்,வயது என்ன என்றால் ?

பதில் .. எட்டாம் வகுப்பு படிக்கிறேன். 15 வயது ஆகிறது.

கேள்வி .. இது என்ன இடம்என்றால்

பதில் .. நீதிமன்றம் ஆகும்.

மேற்படி சாட்சி நீதிமன்ற கேட்ட வினாக்களுக்கு தெளிவுர பதில் அளித்த காரணத்தால் சாட்சி சாட்சியம் அளிக்க தகுதியுடையவர் என்று இந்நீதிமன்றம் கருதி விசாரணை செய்யப்பட்டார்.

முதல்விசாரணை

நான் நிலக்கோட்டை கொக்குப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சௌமியா எனது மாமா மகள் ஆவார். வாகன விபத்தில் இறந்த மாரிமுத்து எனக்கு மாமா உறவு ஆகும்.தங்கப்பொன்னு அக்கா உறவு ஆகும். கடந்த 29.05.2018ம் தேதி 12.15 மணியளவில் பழனியிலிருந்து எங்களது ஊருக்கு ஸ்பௌண்டர் இருச்சக்கரவாகனத்தில் எனது மாமா மாரிமுத்து ஓட்ட எனது அக்கா தங்கப்பொன்னு,நான், எனது அக்கா அ.சா.1 ஆகியோர் சிந்தலவாடம்பட்டி அருகே

வந்த போது பஸ் ஒன்று எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு மேற்படி விபத்தில் தலை,இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டது. எனது அக்கா தங்கபொன்னு,மாமா மாரிமுத்துவும் இறந்த விவரம் இரண்டு மாதம் கழித்துதான் சொன்னார்கள்.விபத்து நடந்தவுடன் நான் கோமா ஸ்டேஜ்-க்குசென்றுவிட்டேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய பேருந்தை யார்ஓட்டிவந்தது என்று எனக்கு அடையாளம் தெரியுமா? என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

நான் விபத்தில் அடிப்பட்டு கோமா நிலைக்கு சென்று இரண்டு மாதம் கழித்து தான் நினைவு எனக்கு வந்தது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலீசார் யாரும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இருச்சக்கராவகனத்தில் நான் எந்த இடத்தில் உட்கார்ந்து வந்தேன் என்றால் முன்புறமாக உட்கார்ந்து வந்தேன். எனது மாமாவிற்கு பின்னால் அ.சா.1 ம் எனது அக்கா தங்கப்பொன்னும் உட்கார்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது மாமா மாரிமுத்து நான்கு நபர்களுடன் இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்து நிலை தடுமாறி பேருந்தில் இருசக்கரவாகனத்தை மோதிவிட்டார் என்றுசொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது மாமா மாரிமுத்துவின் கவனக்குறைவும் மற்றும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்ததால்தான் காரணம் என்றால் சரியல்ல.

(**sd**) **Sugapriya**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **R**.**Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 11/01/2021

**DEPOSITION OF WITNESS**

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

**Judicial Magistrate Court At Oddanchatram**

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 106 | 2018 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**3 | சொக்கன் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | பெரியசாமி | |
| முகவரி: | | | |
| **Religion / Caste** : | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 11/01/2021

அரசு தரப்பில் முதல்விசாரணை

நான் ஏ.கலைமுத்துாரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்த மாரிமுத்து எனது மகன் ஆவார். தங்கப்பொன்னு எனது மருமகள் ஆவார். அ.சா.1, அ.சா.2 என்னுடைய பேத்திகள். சுமார் 2 ,3 வருடத்திற்குமுன்பு எனது மகன் , மருமகள் பேத்திகள் சென்ற இருசக்கரவாகனமானது விபத்தில் சிக்கிக்கொண்டது என்றும், அதில் அவர்களுக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருப்பதாக தகவல்வந்தது.அதன் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்றுபார்த்தேன்.எனது மகன் பழனி மருத்துவமனையில் இறந்துவிட்டார்.மருமகள் தங்கப்பொன்னு மதுரை அரசு மருததுவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் அங்கு அவர் இறந்துவிட்டார்.எனது பேத்திகளான அ.சா.1, அ.சா.2 றிற்கு காயம் ஏற்பட்டு இருந்தது. போலீசார்என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

இல்லை.

**LTI** (**sd**) **Chokkan**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **R**.**Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 11/01/2021

**DEPOSITION OF WITNESS**

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

**Judicial Magistrate Court At Oddanchatram**

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 106 | 2018 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**4 | பாப்பாத்தி | |
| க/பெ/தந்தையின் பெயர் | | சொக்கன் | |
| முகவரி: | | | |
| **Religion** / **Caste** : | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 11/01/2021

அரசு தரப்பில் முதல்விசாரணை

நான் ஏ.கலைமுத்துாரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்த மாரிமுத்து எனது மகன் ஆவார். தங்கப்பொன்னு எனது மருமகள் ஆவார். அ.சா.1, அ.சா.2 என்னுடைய பேத்திகள். சுமார் 2.1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனது மகன் இருசக்கரவாகனத்தில் மருமகள் மற்றும் பேத்திகளுடன் சிந்தலவாடன்பட்டி அருகே வந்த போது பேருந்து ஒன்று மோதி விபத்து நடந்ததாக தோட்டத்தில் இருந்த எங்களுக்குதகவல் வந்தது, கிளம்பி வந்தோம்.எனது மகன் பழனி ஜி.கெச்சில் கொண்டு வந்துஇறந்துவிட்டார்.எனது மருமகள் தங்கபொன்னு மதுரை அரசுமருததுவமனைக்குகொண்டு செல்லப்பட்டு அன்று இரவே அவரும்இறந்துவிட்டார். எனது பேத்தி அ.சா.1 நிற்கு பழனியிலும் எனது பேத்தி அ.சா.2 நிற்கு மதுரையிலும் சிகிச்சை வழங்கப்பட்டது. போலீசார்என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை-

இல்லை.

**LTI** (**sd**) **Pappathi**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **R**.**Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 11/01/2021

## DEPOSITION OF WITNESS

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

## Judicial Magistrate Court At Oddanchatram

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 106 | 2018 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**5 | மணிகண்டன்ராஜன் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| **Religion / Caste** : | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 11/01/2021

அரசு தரப்பில் முதல்விசாரணை

நான் ராமபட்டினபுதுாரில் குடியிருந்து சிந்தலவாடம்பட்டியில் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கடந்த 29.05.2018 ம் தேதி சிந்தலவாடம்பட்டியில்உள்ள எனது டீக்கடைக்கு முன்பு இருசக்கரவாகனத்தில் வந்த நான்கு நபர்கள் மீது பேருந்து ஒன்று மோதிவிபத்து ஏற்பட்டது.அதில் இருசக்கரவாகனத்தில வந்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டது.மேற்படி விபத்து சம்பந்தமாக மறுநாள் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் அதற்குஎன்னிடம் சாட்சியாக கையெழுத்து கேட்க பார்வைமகஜரில் உள்ள கையெழுத்தை செய்து கொடுத்தேன். என்னுடன் முனியப்பன் என்பவரும் அதில் கையெழுத்து செய்தார். பார்வை மகசர் அ.த.சா.ஆ.2. போலீசார்என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் கையெழுத்து செய்த பேப்பரில் போலீசார் என்ன எழுதியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. போலீசார் சம்பவ இடத்திற்கு வராமல் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து பார்வைமகஜரில் உள்ள கையெழுத்தை வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

(**sd**) **Manikandanrajan**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **R.Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 11/01/2021